# கூத்தாநல்லூர் நகராட்சி

## மாபெரும் மழைநீர் வடிகால்கள் தூய்மை பணி முகாம்

நாள்:20.09.2021 இடம்:ஜன்னத் நகர்







கூத்தாநல்லூர் நகராட்சி

மாபெரும் மழைநீர் வடிகால்கள் தூய்மை பணி முகாம்

நாள்:20.09.2021 இடம்: மரக்கடை












கூத்தாநல்லூர் நகராட்சி

மாபெரும் மழைநீர் வடிகால்கள் தூய்மை பணி முகாம்

நாள்:20.09.2021 இடம்: ஜன்னத் மூன்றாம் தெரு






**கூத்தாநல்லூர் நகராட்சி**

**மாபெரும் மழைநீர் வடிகால்கள் தூய்மை பணி முகாம்**

**நாள்:20.09.2021** **செய்தித்தாள் சேகரிப்பு**

வடகிழக்கு பருவ மழையை எதிர்கொள்ள தீவிரம்

# கூத்தாநல்லூரில் வடிகால் வாய்க்கால் சீரமைப்பு பணி

## நகராட்சி ஆணையர் துவக்கி வைத்தார்



► கூத்தாநல்லூர் நகரத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்படும் வடிகால் வாய்க்கால்கள் சீரமைக்கும் பணிகளை நகராட்சி ஆணையர் (பொ) ராஜகோபால் துவக்கி வைத்தார். அருகில் சுகாதார ஆய்வாளர் அருண்குமார்.

**மன்னார்குடி, செப். 21:** வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் கூத்தாநல்லூர் நகரத்தில் மேற்கொள்ளப்படும் வடிகால் வாய்க்கால்கள் சீரமைக்கும் பணிகளை நகராட்சி ஆணையர் (பொ) ராஜகோபால் துவக்கி வைத்தார்.

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையிலும், மழை நீர் வடிவதற்கு ஏதுவாக தெருக்களில் உள்ள வடிகால் வாய்க்கால்களை முழுமையாக சீரமைக்கும் பணிகளை துவக்குமாறு திருவாரூர் மாவட்ட கலெக்டர் காயத்ரி கிருஷ்ணன் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி 24 வார்டுகளை கொண்ட கூத்தாநல்லூர் நகரத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் வடிகால் வாய்க்கால்களை சீரமைக்கும் பணிகள் துவங்கி உள்ளது. 4வது வார்டுக்குட்பட்ட ஜனத் நகரில் நடந்த நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையர் (பொ) ராஜகோபால் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார்.

சுகாதார ஆய்வாளர் அருண்குமார், துப்புரவு பணிகள் மேற்பார்வையாளர் வாசுதேவன் ஆகியோர் தலைமையில் தொடர்ந்து 6 நாட்கள் நடைபெறும் இப்பணிகளில் சுமார் 25 தூய்மை பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தினகரன் Tue, 21 September 2021
https://epaper.dinakaran.com/c/63252945



கூத்தாநல்லூர் நகராட்சியில்

# மழை நீர் வடிகால் சுத்தப்படுத்தும் பணி

## நகராட்சி ஆணையர் ஆய்வு

கூத்தாநல்லூர், செப்.21– கூத்தாநல்லூர் நகராட்சியில் மழைநீர் தேங்காத வகையில் அனைத்து மழை நீர் வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களை தூர்வாரி சுத்தம் செய்யும் பணிகள் நேற்று தொடங்கியது. இந்த பணிகளை நகராட்சி ஆணையர் ராஜகோபாலன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, நகராட்சி ஆணையர் ராஜகோபாலன் கூறியதாவது:–

கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் சுகாதார பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தூய்மை பணியாளர்களை கொண்டு குப்பைகள் தேங்காமல் உடனுக்குடன் அள்ளும் பணிகள் மற்றும் தூய்மை பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. தற்போது மழை பெய்து வருவதால் நகர பகுதியில் உள்ள அனைத்து கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்களில் மழை தண்ணீர் தேங்காத வகையில் சுத்தம் செய்தல் உள்ளிட்ட பணிகள் முன்கூட்டியே செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது சுகாதார ஆய்வாளர் அருண்குமார், சுகாதார மேற்பார்வையாளர்கள் வாசுதேவன், அண்ணாமலை மற்றும் பணியாளர்கள் இருந்தனர்.

# கூத்தாநல்லூர் நகராட்சி

## மாபெரும் மழைநீர் வடிகால்கள் தூய்மை பணி முகாம்

நாள்:20.09.2021 இடம்:ஜன்னத் நகர்






